Koviloor Digital Library

உ

30-4

பூமணப்பிச்சாத்தாள்
படைப்பு மாலை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 33852

ACC NO 33852
30-4

Koviloor Digital Library

Koviloor Digital Library

பூமணைப் பிச்சாத்தாள்

(இயற்றியவர் தெய்வத்திரு. இராம. இராமநாதன், கோனாபட்டு)

ஆயிரம் கண்கள் கொண்டவளே – எங்கள்
அன்னையே பூமணைப் பிச்சாத்தாளே
கோவிலில் உன்னை வணங்கி நின்றோம் – எங்கள்
குலத்தினை என்றும் காத்திடுவாய்

ஆண்டுக்கு ஒருதரம் ஆடிவரும் – உன்னை
அத்தனை கண்களும் தேடிவரும்
வேண்டுதல் எல்லாம் கூடிவரும் – உன்னை
வேண்டியே நின்றால் கைகூடிவரும்!

பூமணம் கொண்ட நாயகியே – நீ
புதுமணம் தந்திட வேண்டுமம்மா
தாய்மணம் வேண்டித் தவங்கிடந்தோம் – பிள்ளை
தவழ்ந்திட வரங்கள் தந்திடம்மா

கோவில் வாசலில் வந்துநின்றோம் – எங்கள்
குறைகளை உன்னிடம் சொல்லி நின்றோம்
தேவியே அவைகளைத் தீர்த்துவைப்பாய் – இந்தத்
தேசம் புகழ்ந்திடக் காத்துநிற்பாய்!

மஞ்சள் குங்குமம் காப்பவளே – நல்ல
மங்கையர் குலத்து நாயகியே
தஞ்சமென்று உன்னைச் சரணடைந்தோம் – செல்வம்
தந்தெமைக் காத்திட வேண்டும்மா!

நினைத்தவை எல்லாம் நடக்குதம்மா – உன்
நிழலிலே நெஞ்சம் வாழுதம்மா
அனைத்தும் உணர்ந்த நாயகியே – உன்னை
ஆடிப் படைப்பிலே வாழ்த்துகிறோம்!

Koviloor Digital Library

பூமணைப் பிச்சாத்தாள் - வரலாறு

(செவிவழிச் செய்திகள்)

திருமகள் எங்கள் செல்வமகள்
செல்வம் தந்திடும் தெய்வமகள்
மருமகள் எங்கள் வாழ்வுமகள்
மணமகள் ஆகி வந்தமகள்
ஒருமகள் குலத்தில் உயர்ந்தமகள்
உலகம் போற்றச் சிறந்தமகள்
திருமகள் பாதம் பணிகின்றேன்
செந்தமிழ்க் கவியால் தொழுகின்றேன்!

கோட்டைகட்டி வாழ்ந்திருக்கும் கோட்டையூரில்
குலவுபுகழ் இளையாற்றக் குடிப் பிரிவில்
நாட்டையாண்ட மன்னர்குலப் பெண்ணாய்த்தோன்றி
நகரத்தார் குலத்தினுக்குத் திலகம் ஆகி
வீட்டுக்குள் வளர்த்தமகள் வீதி எங்கும்
விளையாடித் திரிந்தமகள் ஈரேழ் ஆண்டில்
பாட்டுக்குள் இசைதேடும் பருவம் கண்டாள்
பாசமுடன் பெற்றோர்மணம் பேசக் கண்டாள்

கோபுரங்கள் உயர்ந்திருக்கும் செட்டி நாட்டில்
கோனாபட்டு நகரத்தார் குடும்பம் தன்னில்
மேவுபுகழ் பிள்ளையார் பட்டிச் கோவில்
வேந்தன்மகன் மாப்பிள்ளையாய்த் தேர்ந்தெடுத்து
ஓவியமாய்க் கல்யாணம் செய்துவைத்தார்!
ஒருகுறையும் இல்லாமல் வாழவைத்தார்!
தேவியெனத் திகழ்ந்தவளோ தெய்வமாகும்
திருக்குணங்கள் தன்னிடத்தில் தோன்றக் கண்டாள்

பெருஞ்செல்வச் சிறப்போடு பேணிக் காத்து
பிச்சாத்தாள் குளிப்பதற்கு குளமும் வெட்டி
அருமைமிகு அழகப்பெருமாள் ஊரணியை
ஆக்கிவைத்தார் பிள்ளையார் பட்டிச் சான்றோர்

Koviloor Digital Library

ஒருமகளோ ஊடலுற்றுத் தாய்வீட்டிற்கு
உண்டான பாசத்தால் வந்து நின்றாள்!
அருமை மகள் குறைதீர்த்து வைப்பதற்கு
அன்னைதந்தை வழிதேடி நின்றிருந்தார்!

கோனாபட்டில் இளையாற்றக் குடிவாழ்மக்கள்
குலமகளாய் வந்தமகள் குளிப்பதற்குத்
தேன்மணக்கும் அம்மன்சேங்கைத் திருக குளத்தைச்
சீராகக் கட்டிவைத்துச் செல்வம் வைத்தார்
பூமணக்கும் பிச்சாத்தாள் தனக்கிரண்டு
பொய்கைகளில் அருள்சுரந்து காத்திருக்க
என்சினத்து நின்றாளோ தெரிய வில்லை.
இல்லறத்துப் பயணத்தை தொடரவில்லை.

பிறந்தவீடு அனுப்பிவைக்க, வாழ்த்துச் சொல்லிப்
புகுந்தவீடு அழைத்திருக்க பிச்சாத் தாளின்
சிறந்த மனம் இரண்டிற்கும் இடையில் நின்று
சிறகிழந்த பறவையைப்போல் துடித்துநிற்க
வரங்கள்தரும் தெய்வமாக மாறும் நேரம்
வந்ததன்னால் பிச்சாத்தாள் மனசு மாறி
நிரந்தரமாய் வாழ்வதற்கோர் நிலையம் தேடி
நெடும்பயணம் கொண்டவளாய்ப் புறப்பட்டாளே!

கோட்டையூர் வழியாகக் குறுக்குப் பாதை
கோனாபட்டு நழைவாயில் தன்னை நோக்கி
மாட்டுவண்டி ஒன்றினிலே பிச்சாத்தாள் தான்
மகவுடனே வருகின்றாள் மயங்கும் நேரம்
கோட்டைபோலக் கள்ளணன் கோவில் கண்டாள்
குடியிருக்க இடம்கண்டாள்! குடிதண்ணீர்
வேட்டைகையாய் இருக்குதென்று இறங்கி விட்டாள்!
வேந்தன்மகள் ஊரணியில் விழுந்து விட்டாள்!

Noolaham Digital Library

கண்ணன் கோவிலிலே சிலையாய் நின்றாள்
கைக்குழந்தை ஏந்தியவள் கலையாய் நின்றாள்
பிள்ளைவரம் தருகின்ற பெண்ணாய் நின்றாள்
பிள்ளையார் பட்டியாரின் பெயராய் நின்றாள்
வள்ளலவள் கல்யாண வரம ளிப்பாள்
வாழ்ந்த குடி தாழ்ந்திடாமல் வைத்துக் காப்பாள்
உள்ளத்தில் உயர்ந்தமகள் தெய்வ மானாள்
உலகத்தார் போற்றுகின்ற தெய்வ மானாள்!

மருமகளாய் வந்தவளின் புகழைக் கண்டார்
மகளெனவே மாலை சூட்டி வாழ்த்தி நின்றார்
ஒருமகளைத் தெய்வத்தின் வடிவில் கண்டார்
உயர்கோவில் உனக்காகக் கட்டித் தந்தார்
பெருமைமிகு பிள்ளையார்பட்டி, மக்கள்
பெருஞ்செல்வப் பேறெல்லாம் உன்னால் கண்டார்
தருமமிகு கோனாபட்டில் கோவில் கொண்ட
தாய்குலத்து நாயகியை வாழ்த்து கின்றோம்.

அன்றுதொட்டு இன்றுவரை பிச்சாத் தாளின்
ஆடிமாதப் படைப்பதுவும் சிறக்கக் கண்டோம்
தொன்று புகழ் பிள்ளையார் பட்டியாரும்
தொன்மைமிகு இளையாற்றக் குடியாரும்மே
ஒன்றாகப் போற்றுகின்ற தெய்வ மானாள்
உயர்சக்தி மிக்கவளை வாழ்த்தி நிற்பார்
நன்றாகப் பதினாறு பேறும் பெற்று
நாடுபுகழ் நாயகராய் நன்கு வாழ்வார்!

தங்கத்தில் வைரத்தில் அணிகலன்கள்!
தருகின்றார் ஏலத்தில் பெரு பணங்கள்
எங்கும்நிறைபெரும்பொருள்கள்! வேண்டிக்கொண்டார்
இவளுக்குத் தருகின்ற செல்வம் இங்கே
பொங்கி வரப் பார்க்கின்றோம்! பிச்சாத்தாளின்
பூமாலை பெற்றவர்கள் பூமி தன்னில்
மங்கலமாய் நினைப்பதெல்லாம் பெற்று வாழ்வார்!
மன்னரென வையத்தில் மகிழ்ந்து வாழ்வர்!

(கவிதை : தெய்வத்திரு. இராம. இராமநாதன், கோனாபட்டு